# திருக்குறளும் திருப்புகழும்

***முனைவர் கே. இரா. கமலாமுருகன்***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி)

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6465

***ஆய்வுச்சுருக்கம்***

*உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறள் உலக மக்கள் அனைவரின் வாழ்வியலும் வழிகாட்டும் உன்னத இலக்கியமாக உருவமைத்தளித்துள்ளார் திருவள்ளுவர். திருவள்ளுவரை தெய்வப்புலவர், செந்நாப் போதர் என்றெல்லாம் போற்றுகின்றனர். காரணம் மேற்சொன்னவைதான். அவ்வாறே வாக்கிற்கு அருணகிரி என்று போற்றப்படும் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் இரண்டினையும் ஒப்பீட்டு நோக்கில் அறிந்துரைப்பதாக இவ்ஆய்வு அமைகின்றது.*

***திறவுச்சொற்கள்***

*தாழ்சடை – நீண்ட சடைமுடி, வரைவின்மகளிர் – பொதுமகளிர், பொறிவாயில் – ஐந்துபொறிகள் (ஐம்பொறிகள்), சாக்காடு – இறப்பு, மாசு – குற்றம் (அ) அசுத்தம் (அ) தூசு*

### ஒப்புமையின் சிறப்பு

இலக்கியங்களின் சிறப்பினை மிகுதியாக்கி உணரவும், அவை கூறும் கருத்தின் ஆழத்தை உணரவும், இலக்கிய வடிவமைப்பின் மாற்றங்களை உணரவும் ஆய்வுத்திறனை மேம்படுத்திக்கொள்ளவும் ஒப்புமை நோக்கிலான ஆய்வுகள் உதவுகின்றன.

### திருக்குறளும் திருப்புகழும்

திருக்குறளும் திருப்புகழும் ஒத்தமைந்த சிந்தனைகளை உணர்த்தும் சிந்தனைகளை இங்குக் கண்டோம்.

### மாசற்ற தன்மை

மாசற்ற தன்மை என்பது தூய்மையான நிலைப்பாடு. இது எங்கு தேவை என்றால் மனித வாழ்வில் “சுத்தம் சோறு போடும்” என்ற பழமொழியைப் பற்றிய செய்தி அல்ல இது. மனம் எண்ணம் இவைகளில் உண்டாகும் தூயநிலையினை ஒட்டிய செய்தியாகும்.

காரணம் மனிதனாகப் பிறந்தவர்களுக்கு மனம்தான் அடிப்படையாக அமைகின்றது. இதன் பொருண்மையினைக் கொண்டுதான் மனிதம் செழிக்கிறது. எனவே திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாகவே இதனைத் தெரிந்து தெளிந்து,

**“மனத்துக்கண் மாசிலனாதல் .**
***ஆடுல நீர பிற”*** **திரு.கு : *34***

என்று எடுத்துரைத்துள்ளார்.

பல நூறு ஆண்டுகள் கடந்து பின்வந்த அருள்ஞானி அருளாசிரியரும் தம் திருப்புகழில்

**"சித்தப் பரிசுத்தம் மறவாதே"**

***(திரு. பு : 455)***

என்று சுட்டுகின்றார்.

இத்தகைய சிந்தனையின் பதிவு தெளிவான மனஉணர்வின் அவசியத்தினை காலம் காலமாக மக்கள் பெற வேண்டியதன் அவசியத்தினை உணர்த்துகின்றன. எனவேதான் சித்தர்களும்

**"மனமது செம்மையானால்**
**மந்திரஞ் செபிக்க வேண்டாம்"**

என்று கூறுகின்றார்கள். காரணம் மனம் ஒரு குரங்கு. அதனை நாம் எளிதில் வழிப்படுத்த இயலாது என்பதனையும் பன்னெடுங்காலத்திற்கும் முன்னதாகவே சித்தர்களும் ஞானிகளும் தெளிந்ததன் காரணமாகவே இத்தகைய நெறிப்பாட்டோடு நமக்கும் உணர்த்தப்படுகின்றது.

**ஊழ்வினை**

இந்து மதங்களில் அடிப்படைக் கொள்கைகளில் மிக முக்கியமான ஒன்றாக வாழ்வினை பேசப்படுகிறது.

**"ஊழ்வினை உறுத்து வந்தூட்டும்"**

என்று சிலப்பதிகாரம் சுட்டுகின்றது. அவ்வகையில் ஊழின் இயல்பை திருவள்ளுவர்,

**"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்"**

***(திரு.கு.380)***

என்று எடுத்துரைக்கின்றார்.

விதி என்பதனையே வாழ் என்று இலக்கியங்கள் சுட்டுகின்றன. இந்த வினைப்பயன் காரணமாகவே நம்முடைய வாழ்வில் பல செயல்கள் நிகழ்கின்றன என்பதும், குறிப்பாக துன்பங்களுக்குக் காரணம் இவை என்பதுமான உளவியல் போக்குகள் உள்ளன.

இதனை ஒட்டியே அருணகிரிநாதர் தம் திருப்புகழில்,

**"விதிபோறு முந்த விழியாறு மிந்து**
**நுதலாறு மொன்றி -**
**விரிவான சிந்தை யுருவாகி நொந்து**
**விறல்வேறு சிந்தை"** ***(திரு.பு. 99)***

என்று எடுத்துரைக்கின்றார்.

**பிறப்பும் சிறப்பும்**

மனித வாழ்க்கையில் பிறப்பதும் இறப்பதும் இயல்பு. மனித வாழ்க்கை மட்டுமல்ல உயிர்களாக புமியில் தோன்றும் அனைத்தும் உருவாகி வெளிப்படுதல் மற்றும் அழிதல் என்பதனை இயல்பாக உடையனவே. ஆனால் மனித வாழ்வில் இந்நிகழ்வுகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகப் பதிவு செய்யப்படுகின்றன. அவ்வகையில் திருக்குறள் பிறப்பு மற்றும் இறப்பு நிலையினையும், அந்த மரணம் என்பது சில நொடிகளில் வந்துசேரக் கூடியது என்பதனையும் உணர்த்தும் வகையில்,

**"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு"**

***(திரு. கு : 339)***

என்று பதிவுசெய்து காட்டுகின்றார்.

**திருப்புகழில் அருணகிரிநாதர்**

**"உறங்கி விழிப்பாய் பிறந்த பறப்பேனும்**
**உரங்கொள பொற்பாதம் அருள்வாயெ**

***(திரு.பு. 885)***

என்று பேசுகின்றார்.

அருணகிரிநாதரின் வாழ்வியல் நமக்குத் தெரியும். மரணத்தைக் கடந்து இறையருளாய் மீண்டு நின்று திருப்புகழ் உள்ளிட்ட இலக்கியங்களைத் தந்தவர் என்பதான உண்மை. அவரது சொற்களின் ஆழமும் அதில் புலனாகும்.

**துறவறம்**

துறவு என்பது வாழ்வியல் விரும்பாதவர்கள் மற்றும் இறையருளின் உயர்நிலைப் பேறாகிய பேரின்பன் விரும்புபவர்கள் என அனைவரும் தேடி சரணடையும் நிலையாகும்.

இல்லறத்தின் துன்பம் கருதி மட்டுமின்றி, இல்லறத்தினை முறையாக முடித்தவர்களும்,

துறவறம் தேடுவதுண்டு என்பதனை அறிய இயலுகின்றது. திருவள்ளுவர் துறவறவியல் என்றே பேசுகின்றார். மேலும் இல்லறத்தார்க்குரிய அறநெறிகளில் துறவறம் உடையவர்களைப் பேணுதலையும் முக்கிய கடமையாகக் காட்சிப்படுத்துகின்றதனையும் நாம் காணுகின்றோம். துறவு பற்றிய செய்தலும் இடுநிலைகளை வள்ளுவர் பதிவு செய்கின்றார். மிகச்சரியாகப் பெரியவர்கள் காட்டிய வழியில் வாழ்வினை அமைத்துக் கொண்டவர்கள் துறவுக்குரிய அடிப்படை செயல்களுடனான மழித்தல் நீட்டல் என்பதனை செயல்களைச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதனைத் தெளிவாகத் திருவள்ளுவர்,

**"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழித்து விடின்" *(திரு.கு. 280)***

என்று பதிவுசெய்து காட்டுகின்றார்.

அருணகிரிநாதரும், இக்கருத்தினை அடியெற்றி

***"தலைமை மழித்துப் புரிந்து புலியாடை தலையை***
***தவமொரு சத்தத் தளிந்து நீரநீறு"***

***(திரு. பு. 569)***

என்று எடுத்துக் கூறுகின்றார்.

மேலும்,

**"காவி உடுத்தும் தாழ்சடை வைத்தும்**
**காடுகள் முற்றும் திரியாதே"**

**(திரு.பு. 638)**

என்றும் எடுத்துக்கூறுவதன் மூலம் திருவள்ளுவர் கூறும் முடியினை நீண்ட சடையாக வளர்த்தலோ அல்லது மொட்டையடித்தல் போன்ற செயல்களோ மற்றும் காவியாடை உடுத்துவதோ என்பதான செயல்களை வள்ளுவரின் துறவு நெறியில் செயல்களுக்குரியதான நிலையில் தேவையற்ற முறைகளாக எடுத்துரைத்தல் என்பதனை இருவரின் ஒத்த உணர்வுப் பதிவுகளாகவே நாம் காண முடிகின்றது.

**நிலையாமை உணர்தல்**

இந்த உலகம் உள்ளிட்ட பல்வேறு செயல்களும் அதனுடன் இணைந்து இயங்கும் நம்முடைய வாழ்வும், வாழ்வின் அடிப்படையாகிய உடலும் உயரும் என அனைத்தும் நிலையற்றவே ஆகும். இவை கண்ணில் தெரிவது போன்றும் இருப்பது போன்றும் நிலைத்த இயல்புடையன போன்றும் தோற்றம் தரினும் உண்மையில் உடல்நிலையில்லாதது, உயிர்நிலையில்லாதது, இளமை நிலையில்லாதது, செல்வம் நிலையில்லாதது என பட்டியல் தொடர்கின்றது. ஆனால் மனித மனம் இதனை எளிதில் உணர்வதில்லை என்பதுவே உண்மை. இதனையே அற்ப மனிதம் அற்ப மனம் என்றெல்லாம் நாம், ஏளனம்செய் கின்றோம் திருவள்ளுவர் தெளிவாக இதனையே

**"நிலாத வற்றை நிலையன என்றுணரும்**
**புல்லறி வாண்மைக் கடை"**

***(திரு. கு. 331)***

என்று தெளிவாகக் கூறுகின்றார். இக்கருத்தினை அருணகிரியாரின் திருப்புகழிலும்

***"நிலையாய் பொருளை யுடலாக் கருதி***
***நெடுநாம் பொழுது மவமேவோய்***
***நிறைபோய்ச் செவிடு குருடாய்ப் பிணிகள்***
***நிறைவாய்ப் பொறிகள் தடுமாறி."***

***(திரு. பு. 72)***

என்று பதிவுசெய்கின்றார்.

இருவரின் பாடல் சிந்தனைகளும் நிலையாமைத்தன்மையை எடுத்துணர்த்துகின்றன.

பொதுமகளிர் என்பதான பொருளில் வரைவின் மகளிர் சுட்டப்படுகின்றனர். குலமகளின் பண்புகளில் நீங்கியவர்களாக இவர்களைப் படுத்துணர்கின்றோம்.

திருவள்ளுவர் ஓர் அதிகாரத்தினையே வகுத்து "வரைவின் மகளிர்" *(அதிகாரம் : 92)* என்று பேசுகின்றார்.

**"சேலைகட்டிய மாதரை நம்பாதே"**

என்று பட்டினத்தார் பதிவிடுகின்றார். அருணகிரிநாதர் தம் திருப்புகழில் "பொய் மங்கையர்" என்று குறிப்பிடுகின்றார்.

எச்சொல்லாயினும் பொது தொடர்பு தவிர்க்க வேண்டும் என்பதான பொது நியதியே அனைவரும் உரைப்பதான ஒரு மொழியாகிறது.

## மும்மலமறுத்தல்

மனித வாழ்வின் துன்பங்கள் அனைத்தும் அவர்களது ஐம்பொறிகளின் அவாவினால் உண்டாகின்றன. அத்தகைய உணர்வு நிலையில் வாழ்வினைத் தொலைத்திடக் காரணமாகிய ஆணவம், கன்மம், மாயை என்பதான நிலைகளை நீக்கி காமம் வெகுளி மயக்கம் என்ற துன்பங்களிலிருந்து விடுபட்டுத் தம் வாழ்வினைத் தூய்மைத் தன்மையுடையதாக அமைத்துக்கொள்ள மனிதர்கள் முயல வேண்டும் என்பதுதான் வாழ்வின் அடிப்படை நியதியாகும்.

இதனை உணர்த்தும் வகையில் திருவள்ளுவர்,

**"காமம் வெகுளி மயக்கம்**
**நாமம் கெடக்கெடும் நோய்"**

**(திரு.கு. 360)**

என்று சுட்டுகின்றார்.

மேலும் கடவுள் வாழ்த்துப் பகுதியிலேயே

**"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்"**

**(திரு. கு. 6)**

என்று அறிவுறுத்தி விடுகின்றதனையும் நாம் உணர வேண்டும்.

**திருப்புகழில் அருணகிரிநாதர்**
**"மாலாசை ......... ஓயர்த நாளும்**
**விகார வழியே செல் மாபாவி"**
**(திரு. பு. 363)**

என்று பதிவுசெய்துள்ளார். ஏதாயினும் நன்னெறி வாழ்தல் அவசியமாகின்றது.

## நிறைவுரை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்னதாகவே திருவள்ளுவர் கூறிய பதிவுகளும் காலத்தால் மாறுபட்டாலும் வாழ்வினை நன்னெறிப்படுத்தல் என்பதான இயல்பில் மாறுபடவில்லை. உலகப்பொதுமறை உள்ளிட்ட இலக்கியம் காட்டும் நன்னெறி உணர்ந்து உரைத்தல் மட்டமன்று, உணர்ந்து வாழ்தலை உணர்த்துவதும் இக்கட்டுரை நோக்கமாகும்.

## உதவிய நூல்கள்

1. திருக்குறள் - திருவள்ளுவர்
2. திருப்புகழ் - அருணகிரிநாதர்
3. சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்
4. திருமந்திரம் - திருமூலர்